2026 ஜுலை மாதம் 29– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 142/2025

2026–ஆம் ஆண்டு ஜுலை மாதம் 29– ஆம் தேதி புதன்கிழமை திருமதி.டீ.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW5 (LW6) – ராஜசேகரன் |
| தகப்பனார் பெயர்: | ராமதாஸ் |
| ஊர்: | பூதிப்புரம் |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | தலைமை காவலர், காவல்கட்டுப்பாட்டு அறை, தேனி |
| வயது : | 41 |

29.07.2026

(2 வது எதிரி ஆஜர். 1 வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி மாவட்ட காவல்கட்டுப்பாட்டு அறையில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.05.2024 ம் தேதி போடி தாலுகா காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்தபோது, போடி தாலுகா காவல்நிலைய குற்ற எண்.269/2023 பிரிவுகள் 4 (b) of Explosive Substances Act 1908 & 286 I.P.C., Act வழக்கில் கைப்பற்றப்பட்ட தடய பொருட்களை சென்னை, தடய அறிவியல் ஆய்வகத்தில் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்ட Exp.36/2024 அறிக்கையை பெற்றுவர அலுவல் நியமிக்கப்பட்டேன்.

2. அதன்பேரில் உத்தரவின்படி சென்னை, தடய அறிவியல் ஆய்வகத்திற்கு சென்று, பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்ட தடய பொருட்கள் பிளாஸ்டிக் டப்பாவில் சீல் வைக்கப்பட்டிருந்ததையும், அறிக்கையையும் பெற்று, அதை போடி, குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். காவல் நிலையத்தில் அறிக்கை செய்தேன். இது சம்பந்தமாக 16.05.2024ம் தேதியன்று காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அவகாசம் வழங்கியும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 29.07.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.29 17:01:56 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
29.07.2026